www.Padasalai.Net www.CBSEtips.in

11 - ஆம் வகுப்பு **காலாண்டுத் தேர்வு - 2023** பதிவு எண்.

காலம் : 3.00 மணி FTS **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள் : 90

(செய்யுள், உரைநடை) 14 X 1 = 14

**குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்க. iii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்தெழுதுக.**

1. பாயிரம் இல்லது அன்றே அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**
   அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
   அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ
3. கலைகளின் உச்சம் எது? அ) கவிதை ஆ) சிற்பம் இ) இசை ஈ) நடனம்
4. மண்ணுக்கு வளம் சேர்ப்பன அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
5. வான் பொய்த்தது - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
   அ) வானம் இழந்தது ஆ) மழை பெய்யவில்லை இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
6. 'தகப்பன் கொடி' - என்னும் புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர்
   அ) வில்வரத்தினம் ஆ) அழகிய பெரியவன் இ) பெரியவன் கவிராயர் ஈ) ஜெயமோகன்
7. 'முதனிலை' - என்று வழங்கப்படும் பகுபத உறுப்பு எது? அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி
8. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
9. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) வெள்ளி வீதியார் | - | புறநானூறு | அ) அ ஆ இ ஈ |
| ஆ) அண்ணாமலையார் | - | சி.சு. செல்லப்பா | ஆ) ஆ ஈ அ இ |
| இ) வாடிவாசல் | - | குறுந்தொகை | இ) இ ஈ ஆ அ |
| ஈ) இளம்பெருவழுதி | - | காவடிச்சிந்து | ஈ) இ ஈ அ ஆ |

10. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
    நாவினால் சுட்ட வடு - *இக்குறட்பாவில் பயின்று வரும் அணி.*
    அ) உவமையணி ஆ) வேற்றுமை அணி இ) பின்வரு நிலையணி ஈ) உருவக அணி
11. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
    அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
12. 'பிள்ளைக்கூடம்' - என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?
    அ) போதனார் ஆ) தொல்காப்பியர் இ) பாரதியார் ஈ) இரா.மீனாட்சி
13. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது? அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
    இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
14. 'செங்கயல்' என்ற சொல்லின் இலக்கண குறிப்பு
    அ) எண்ணும்மை ஆ) உருவகம் இ) வினைத்தொகை ஈ) பண்புத் தொகை

**பிரிவு - 1) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. காவடிச்சிந்து என்பது யாது?
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

**பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. வால்ட் விட்மன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? இவரின் புகழ்பெற்ற நூல் எது? அமெரிக்கா, புல்லின் இதழ்கள்
20. தமிழ் நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.
21. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

**பிரிவு - 3 எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த் நாடு வந்தனர் - தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு தொடர்கள் அமைக்க.
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.* அ) திருப்புகழ் ஆ) பூங்கொடி
24. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.* அ) ஈன்ற ஆ) மெலிந்து
25. *பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
    அ) கனை, கணை (ஆ) குரை, குறை
26. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.* அ) வைகை ஆ) தங்கை
27. நிலையின் திரியாது ............ தோற்றம்.
    மலையினும் ........ பெரிது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

28. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*
அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலை நாட்ட செய்தனர்.
29. *பிறமொழிச் சொற்களைத் தமிழ்படுத்துக.* அ) போலீஸ் ஆ) சந்தோஷம்
30. கலைச் சொல் தருக. அ) Classical Language. ஆ) Value Education.

III (பிரிவு - 1) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது.
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
34. தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

(பிரிவு - 2) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 X 4 = 8


35. மசானபு ஃபுகோகாவின் ஐந்து வேளாண் மந்திரங்களை எழுதுக.
36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் குறிப்பு வரைக.
38. ஆனந்தரங்கரின் இறுதிக்கலா நாட்குறிப்புகள் சொல்லும் செய்திகளை எழுதுக.

பிரிவு - 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3 X 4 = 12

39. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் இன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
சொற்பொருள் பின்வரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் - ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்! - *பாரதியார்.*

41. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




42. 'பேசு' என்ற வேர்ச்சொல்லை வினை முற்று வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.
43. **தமிழாக்கம் தருக.**
1) The pen is mightier than the sword. 2) A picture is worth a thousand words.
3) Winners don'ts do different things. 4) Knowledge rules the world.

IV அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 3 x 6 = 18

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை - தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. *(அல்லது)* ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.
45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரி. *(அல்லது)* ஆ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி, முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. வடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

V அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

47. அ) உண்டால் அம்ம ......... எனத் தொடங்கும் புறநானூறு பாடல்.
ஆ) 'நன்று' - என முடியும் குறள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத்தேர்வு – 2023

வகுப்பு – 11

## பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள்

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க (14 x 1 = 14)

1. ஆ) பனுவல்
2. இ) ஆ,ஈ
3. அ) கவிதை
4. ஈ) இவை அனைத்தும்
5. ஆ) மழை பெய்யவில்லை
6. ஆ) அழகிய பெரியவன்
7. அ) பகுதி
8. ஆ) அண்ணாமலையார்
9. இ) இ ஈ ஆ அ
10. ஆ) வேற்றுமையணி
11. அ) நற்றிணை
12. ஈ) இரா.மீனாட்சி
13. ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
14. ஈ) பண்புத்தொகை

### பகுதி – II

பிரிவு – 1 ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3 x 2 = 6)

15. பாயிரம்
    - நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள்
    - செயலின் வலிமை
    - பகைவனின் வலிமை
    - தன்வலிமை
    - துணையாளரின் வலிமை
17. காவடிச்சிந்து
    - தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனப்படும்.
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் :
    - மேருமலை போல் மதீனா நகரின் மேல்மாடங்கள் உயர்ந்திருந்தன.
    - அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல் போல் இருந்தது.
    - மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம்போல் பரந்து விரிந்திருந்தன.
    - அத்துடன் பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.
    - தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்னகர் போல் பொலிந்தது.
    - அதனால், மதீனாநகரம், 'ஒரு மாளிகை நகரம்' என்பது உறுதிபட்டது.

ப.க.சுரேஷ் முதுகலைத் தமிழாசிரியர் , அரசு மேனிலைப் பள்ளி, நெரூர், கரூர். – 9942141963

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பிரிவு – 2 ( எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) (2 x 2 = 4)

**19. வால்ட் விட்மன்**

- நாடு – அமெரிக்கா
- நூல் –புல்லின் இதழ்கள்

**20. தமிழ்நாட்டின் மாநிலமரம் :**

- நம் தமிழ்நாட்டின் மாநிலமரம் பனைமரம்.
- இது, ஏழைகளின் கற்பக விருட்சம்.
- சிறந்த காற்றுத் தடுப்பான்.
- ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது.
- இதனால், நிலத்தடி நீர்மட்டம் குறையாது.

**21. கோட்டை:**

- 'கோட்டை' என்னும் சொல் கோட்ட, கோடு, கோட்டே, கோண்டே, கோட்ட, க்வாட் எனத் திராவிட மொழிகளில் எடுத்தாளப்படுகிறது.

**பிரிவு – 3 ( எவையேனும் ஏழனுக்கு மட்டும்) (7 x 2 = 14)**

22. கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

23. புணர்ச்சி விதி ( ஏதேனும் ஒன்று)

அ) திருப்புகழ் – திரு + புகழ்

விதி – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

ஆ) பூங்கொடி – பூ + கொடி

விதி – பூப்பெயர் முன் இன மென்மையுந் தோன்றும்.

24. பகுபத உறுப்பிலக்கணம் ( ஏதேனும் ஒன்று)

அ) ஈன்ற – ஈன்+ற்+அ

ஈன் – பகுதி

ற் – இறந்த கால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

ஆ) மெலிந்து – மெலி + த்(ந்) +த் + உ

மெலி – பகுதி

த் – சந்தி (ந்) விகாரம்

த் – இறந்த கால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்தல்

அ) கனைக்கும் குதிரையைக் கணையால் தாக்கினான்.

ஆ) குரைக்கின்ற நாயின் சத்தம் குறையவில்லை.

26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைத்தல்

அ) வைகை – வைகை ஆற்றில் வை கை என்றான் .

ஆ) தங்கை – என் தங்கை, தன் கையே தனக்குதவி என்று வாழ்ந்து வருகிறாள்.

ப.க.சுரேஷ் முதுகலைத் தமிழாசிரியர் , அரசு மேனிலைப் பள்ளி, நெரூர், கரூர். – 9942141963

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

27. திருக்குறள் – அடங்கியான், மாணப்

28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.

ஆ) சான்றோர், மிகுந்த பொறுப்புடன் சேவை புரிந்து, கொள்கையை நிலை நாட்டச் செய்தனர்.

29. பிறமொழிச் சொல்லை தமிழ்ப்படுத்துக. அ) காவலர் ஆ) மகிழ்ச்சி

30. கலைச்சொல் தருக. அ) செம்மொழி ஆ) மதிப்புக்கல்வி

## மொழிப்பயிற்சி

**41. கருத்துப்படம்**

- தமிழ் மொழியின் ஐவகை இலக்கணப் பிரிவுகளுள் 'பொருள் இலக்கணம்' தமிழர் வாழ்வுமுறை கூறுவதாகும். இந்த பொருள் இலக்கணம் அகம், புறம் என இருவகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அன்புநிறை காதல் வாழ்வைப் பற்றிக் கூறும் அகப்பொருள் செய்திகளை விளக்கும் இலக்கணம் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- முதற்பொருள் என்பது நிலத்தையும் பொழுதையும் குறிக்கும். நிலமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும். பொழுது என்பதைச் சிறுபொழுது, பெரும்பொழுது என இருவகையாகப் பிரிப்பர்.
- 'கருப்பொருள்' என்பது தெய்வம், மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், மரம், உணவு, பறை, தொழில் என்னும் பிரிவுகளைக் கொண்டது.
- 'உரிப்பொருள்' என்பது புணர்தல் புணர்தல் நிமித்தம், பிரிதல் பிரிதல் நிமித்தம், இருத்தல் இருத்தல் நிமித்தம், ஊடல் ஊடல் நிமித்தம், இரங்கல் இரங்கல் நிமித்தம் என ஐந்து வகைப்படும்.

**42. பேசு –**

அ) முருகன் அவனிடம் பேசினான் – வினைமுற்று.

ஆ) முருகன் அவனிடம் பேசிச் சென்றான். – வினையெச்சம்

இ) அவனிடம் பேசிய முருகன் – பெயரெச்சம்

ஈ) அவனிடம் பேசியவன் யார்? – வினையாலணையும் பெயர்.

**43. தமிழாக்கம் தருக.**

அ) வாளின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது.

ஆ) ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

இ) வெற்றியாளர் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை மாறாக, ஒவ்வொரு செயலையும் வித்தியாசமாக செய்கிறார்கள்.

ஈ) அறிவே உலகை ஆளுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com